திட்டம். ஒவ்வொரு ஆண்டுக்கும் குறிப்பிட்ட தொகை என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். முதல் ஆண்டு 2 கோடியே 25 இலட்சம். அடுத்த ஆண்டு 3 கோடியே 56 இலட்சம். மூன்றாவது ஆண்டு 3 கோடியே 69 லட்சம், 4வது ஆண்டு 2 கோடியே 13 லட்சம்; 5-வது ஆண்டு, 2 கோடியே 10 லட்சம். ஆக மொத்தம் 13 கோடியே 76 லட்சம் இதற்கென போடப் பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் இப்போது பைனல் ஸ்டேஜில் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. அதைப் பார்த்து டேனிஷ் கவர்ன்மென்ட் ஒப்புதல் கொடுத்த பிறகு அது செயல்படுத்தப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டென்மார்க் அரசின் உதவியோடு தாய்-சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம் உள்ளது போன்று, ஏனைய வெளிநாடுகளின் உதவி வேறு ஏதாவது இந்த தாய்-சேய் நல மேம்பாட்டிற்காக இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த நாடுகள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

மாவட்டந்தோறும் தனித்தனி போக்குவரத்து கழகங்கள் அமைக்கும் திட்டம்

*வினா எண். 643—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக போக்கு வரத்துக் கழகம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்பட்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும், தனித்தனி போக்குவரத்துக் கழகங்களை அமைக்கலாம் என்ற பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதன் பேரில் மேற்கொண்டு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தால், மிகப் பெரிய அளவிலான நிர்வாகத்தை நடத்த மிகவும் சிரமப்படுவதால், அதை இரண் டாகப் பிரித்து, வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒன்றும்; தென் னாற்காடு மாவட்டத்திற்கு ஒன்றுமாகப் பிரித்து, வேலூரை

1981 ஏப்ரல் 4]

தலைமையிடமாகக் கொண்டு இயங்குவதற்கான ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதாக அறிகிறேன். அது எப்போது செயலுக்கு வரும்,

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்சம் ஒரு போக்குவரத்துத் கழகத்தில் 600-க்கும் மேற்பட்ட பேருந்துகள் இருந்தால் தான் அதை பிரிப்பதினாலே பயன் ஏற்படும். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் மிகப் பெரிய போக்குவரத்துக் கழகம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உண்மை அது அல்ல. 387 பேருந்துகள் தான் அங்கே இயங்கிக் கொண் டிருக்கின்றன. நிர்வாகத்தில் பிரச்னை இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சொன்னார்கள். ஆனால் அதன் அடிப் படையில்தான் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் புற நகர்ப் பிரிவையும், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தையும் ஒன்றாகச் சேர்த்து, முறையாக அதை பிரித்து விடலாமா என்ற கருத்து அரசின் பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழகம் இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் போது, கண்ணியம் மிகுந்த காயிதே மில்லத் அவர்கள் பிறந்த மாவட்டம் ஆதலால் அவருடைய பெயரை பிரிக்கப்பட்ட அந்தப் போக்குவரத்துக் கழகத்திற்கு சூட்டுவதற்கு அரசு முயலுமா அந்த அடிப்படையில் அரசு அதை பரிசிலனை செய்யுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பதைப் பற்றித்தான் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். பெயர் வைப்பதைப் பற்றி அல்ல. இருந்தாலும் அப்படிப் பிரித்த பிறகு அந்தந்த மாவட்டத் தலைவரின் பெயரை வைப்பதில் மக்களுடைய விருப்பத்தை அறிந்து வரத்துக் கழகத்தைப் டும். கட்டபொம்மன் போக்கு ள் ல்பெய பொருத்தவரையில், அதைப் பிரிக்கும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளும். அவர் சொன்ன அந்த அடிப்படையிலேயே அரசுக்கும் அக்கறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிப்பதற்கான ஆலோசனை இருக்கிறதா? அப்படி பிரிக்கப்படுமேயானால் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தை, அந்த மாவட் டத்தின் தந்தையாகிய திரு. நேசமணி.............

[1981 ஏப்ரல் 4

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போக்குவரத்துக் கழகங்களைப் பிரிப்பதை பற்றித்தான் கேள்வி. பெயர் வைக்கப்படுவது பற்றி அல்ல.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கார்ப்பொரேஷனை இரண்டாகப் பிரிப்பதைப் பற்றி அறிவிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே பேசியிருக்கிறார்கள். அது எப்போது பிரிக்கப்படும் கூடிய வரையில் இந்த நிதி ஆண்டிலேயே அதைப் பிரிப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் 675 பேருந்துகள் இருக்கின்றன. அதைப் பிரிக்கலாம் என்ற அடிப்படையில் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் படிப்படியாக இருக்கிற பேருந்துக் கழகங்களைப் பிரித்துக் கொண்டு வரும்போது, இந்தக் கழகத்தை காலதாமதமாகத்தான் பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி சேலம் ஆகிய இரு மாவட்டங்களிலும் ஓடிக் கொண்டிருக்கும் அண்ணா போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்து தர்மபுரி மாவட்டத்தில் ஓடக் கூடிய கார்ப்பரேஷனுக்கு, அதியமான் அவர்களின் பெயரை வைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. சி. கோபால் : மாவட்டத்திற்கு ஒரு போக்குவரத்துக் கழகம் அமைக்க உத்தேசம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அப்படி அமைக்கிறபோது நிர்வாகம் சரிவர இயங்க பிரதிநிதிகள் சார்பாக ஆலோசனைக் குழு ஒன்று அமைக்க அரசாங்கத்திடம் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அப்படி பிரிக்கிறபோது தான் அமைக்க வேண்டும் என்ற அவசியமில்லை. தேவை என்றால் இப்பொழுதுகூட அமைக்கலாம். அது நடைமுறையில் கூட இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் சில போக்குவரத்துக் கழகங்களுக்கு அதை அமைப்பதாய் இருக்கிறது.